REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

470 தேர்தல் வழக்குகள்!

★

புதுடில்லி, மே 17—

1957 மே 14-ந்தேதிவரை வந்துள்ள தேர்தல் வழக்குகளின் எண்ணிக்கை 470 என்று தேர்தல் கமிஷனர் தெரிவித்திருக்கிறார்.

இவைகளில் 58 மக்கள் சபைத் தொகுதிகளையும், 412-சட்டசபைத் தொகுதிகளையும் பற்றியவையாம்!

மலர் 4] சென்னை: வைகாசி 5உ சனி (18—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 6உ ஞாயிறு (19—5—57) இதழ் [291

தமிழர் நலனில் வடவர் காட்டும் அக்கறை!

கிடைத்ததே பாக்கியம் — கொடுத்ததே போதும் என்று பேசும் சென்னை மந்திரிகள் கவனத்திற்கு!

கேரளத்தின் கோரிக்கைப் பரிசீலிக்கப்படுகிறது

புதுடில்லி, மே 17—

கேரள கம்யூனிஸ்டு சர்க்கார் தங்கள் மாநிலத்திற்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல என்பதால், இப்போது தொகை அதிகமாக வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளனர் அல்லவா?

அந்தக் கோரிக்கை பற்றி மக்கள் சபையில் கருத்தறிவித்த நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கேரள மந்திரிகள் ஜூன் மாதத்தில் டில்லி வருவர் என்றும், அப்போது, திட்டக் குழுவுடன் இது குறித்துப் பேசலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யப் பொருளாதார நிலை என்ன?

புதுடில்லி, மே 17—

ரஷ்யப் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு 1,200 கோடி ரூபிள்கள் கடனாகத் திரட்ட ரஷ்ய அரசாங்கம் முனைந்துள்ளதாம். இது 5 ஆண்டுத் தவணையில் திருப்பித் தரப்படுமாம்.

கடன் பத்திரங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு தரப்படுகிறதாம்.

அவதியுறும் இலங்கைத் தமிழருக்கு பண்டிதர் காட்டும் வழி

பிரச்சினைபற்றிப் பேசவே நேரமில்லையாம்

கொழும்பு, மே 17—

"நான், இலங்கை வந்திருப்பது, இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிப் பேச அல்ல; எனக்கு, அதற்கு நேரமில்லை,"

என்று, பண்டித நேரு, தனக்கு, இலங்கை இந்தியர் சார்பில் கூட்டாகத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பேசியிருக்கிறார்.

'இந்தியில் பேசட்டுமா?' என்று அவர் கேட்டபோது, கூட்டத்தினர், உற்சாகத்தோடு பதில்தரவில்லை என்பதால், ஆங்கிலத்தில் பேசியதாக சென்னை இதழ் கிருபர் கூறுகிறார்.

வரவேற்பு தந்தபோது, 'இந்திய' சமூகத்தினர், தங்களது கவலைக்குரிய பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட்டு பண்டிதரிடம், முறையிட்டுக்கொண்டனராம்.

அந்த முறையீட்டிற்குத்தான், 'எனக்கேது நேரம்?' என்று பதில் தந்திருக்கிறாராம்.

மேலும் பேசிய பண்டிதர், இலங்கை இந்தியர் தங்கள் பிரச்சினைகளை அணுகவேண்டிய முறை குறித்தும் உபதேசம் செய்திருக்கிறார்.

"ஒவ்வொரு பிரச்சினையையும் நீங்கள் சிநேகபாவத்துடன் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் நோக்குடன் அணுக வேண்டும். பரஸ்பர நல்லெண்ணம், பொறுமை இவற்றுடன் அவற்றைப் பரிசீலிக்க வேண்டும்.

"நான் ஒன்றைச் நினைவுபடுத்த விரும்புகிறேன். இலங்கை இந்தியர் பிரச்சினையையோ, அல்லது இந்தியாவிற்கும் இலங்கைக்கும்இடையேயுள்ள வேறெந்தப் பிரச்னையையோ, அதனை இந்தியா நேசபாவத்துடன்தான் அணுகிவந்துள்ளது; இனியும் அப்படியேதான் நடந்துகொள்ளும். இதனை மாற்றுவதற்கு இல்லை," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி விவாதிக்க அல்லவாம்!

புத்தஜெயந்தியில் கலந்து கொள்ள மட்டும்தானும்!

பண்டிதரின் இலங்கைச் செல்கை பற்றி டெல்லி அமைச்சர்

"பண்டித நேரு, இலங்கைக்குச் சென்றிருப்பது புத்த ஜெயந்தி விழாவில் கலந்துகொள்ளவும், 'அனுராதபுரம்' நகரத்தைத் திறந்துவைக்கவுந்தானே தவிர, இந்த இலங்கைத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் பிரச்சினை பற்றி விவாதிக்க அல்ல"

என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது உதவி வெளிவிவகார இலாகா மந்திரி திருமதி லட்சுமிமேனன் கூறியிருக்கிறார்.

குடியுரிமை மனுக்கள் நிராகரிப்பு

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"65,482 பேர்களுக்குக் குடியுரிமை வழங்கும் 17,652 மனுக்கள் இலங்கை சர்க்காரால் ஏற்கப்பட்டிருக்கின்றன.

"5,50,495 பேர்களுக்கு குடியுரிமை கோரும் 1,69,984 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

"குடியுரிமை நிராகரிக்கப்பட்டவர்கள் இந்தியா திரும்பினால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்."

கழகத் தோழர்கள்மீது காங்கிரசார் தொடர்ந்த வழக்கு

பொய்யானதென நீதிபதி தள்ளுபடி

சேந்தமங்கலம், மே 16—

சேந்தமங்கலம் —மின்னாம்பள்ளி தி. மு. கழகத் தோழர்கள் மீதும், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் மீதும் காங்கிரஸ்காரர்களால் 'காங்கிரஸ் சுவரொட்டிகளை' கிழித்ததாக வழக்குத் தொடரப்பட்டது நினைவிருக்கலாம். இதுவரை விசாரணை நடைபெற்று வந்த அவ்வழக்கு, சென்ற வாரம் சங்கரி மாஜிஸ்டிரேட் அவர்களால், பொய் வழக்கென கூறி தள்ளுபடி செய்யப்பட்டது. (ந. - கி.)

'சோஷலிசம்' படும்பாடு!

'இந்து சோஷலிசம்' காணுவதே மகாசபையின் இலட்சியமாம்!

இந்தியத் துணைக்கண்டத்து அரசியல்வாதிகளிடை இந்த 'சோஷலிசம்,' என்ற வார்த்தை அகப்பட்டுக்கொண்டு படாதபாடு படுகிறது!

அகில இந்திய இந்துமகா சபையின் செயற்குழு மூன்று நாட்களாக டில்லிப் பட்டணத்தில் கூடி, பல்வேறு பிரச்சினைகளைக் குறித்தும் விவாதித்துவிட்டு தங்களுடைய இலட்சியம் இதுதான் என்று வரையறுத்தும் உள்ளனராம்!

அது எது?

அந்த இலட்சியம் என்னவென்கிறீர்களா? அதுதான் 'இந்து சோஷலிசம்,' காணுவதாம்!

விளக்கமென்ன?

இந்த 'இந்து சோஷலிசம்,' என்றால் என்ன என்பதை விளக்கவும் மகாசபையினர் முயற்சித்திருக்கின்றனர்.

"நமது அரும்பெரும் முனிபுங்கவர்களாலும், தபசிகளாலும் போதிக்கப்பட்ட வாழ்வின் உண்மையான சிரேஷ்டங்களை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்து சோஷலிசம்" என்று, தீர்மானம் கூறுகிறது.

இதுமட்டுமல்லவாம்! தங்கள் இலட்சியம் இன்றைய நாட்களின் 'ஜனநாயக சோஷலிசம்,' என்று அழைக்கப்படுகிற சோஷலிசமும் தான் என்றும் கூறியுள்ளனர்.

இருமொழி பம்பாய் மாநில ஏற்பாடு

மக்கள் சபையில் பண்டித பந்த் சப்பைக்கட்டு

இருமொழி பம்பாய் மாநில ஏற்பாட்டிற்கு எதிராக மக்கள், தேர்தலில் தீர்ப்பளித்திருக்கின்றனர்; எனவே இந்த ஏற்பாட்டினைக் கைவிட்டு விட்டு, பம்பாய் நகரம் உள்ளிட்ட மாராட்டிய மாநிலமும் மகாகுஜரத் மாநிலமும் அமைக்க வேண்டுமென மக்கள் சபையில், குரல் எழுப்பப்பட்டதல்லவா?

இதற்குப் பதிலளிக்கையில் உள்நாட்டு மந்திரி பண்டிதபந்த், இருமொழி பம்பாய் ஏற்பாட்டிற்கு சப்பைக்கட்டுக் கட்டியிருக்கிறார்.

"காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்விகள் குறித்து சிலர் வருந்தினர்கள்; சிலர் பிரச்சினைபற்றிக் குறிப்பிட்டார்கள்: சிலர் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வி கண்டு களித்தார்கள்; இந்தச் சபையைப் பொறுத்தவரையில், காங்கிரசிற்கு மக்கள் சபையிலும், மாநிலங்கள் சபையிலும் முன்னைவிட அதிகமான இடங்களே கிடைத்திருக்கின்றன. எனவே, நமக்காக அனுதாபப்படுகிறவர்கள் ஒன்றும் கண்ணீர் விடவேண்

(1-ம் கலம் பார்க்க.)

(5-ம் கலத் தொடர்ச்சி)

டாம்" என்று பண்டித பந்த் குறிப்பிட்டாராம்!

உடனே பம்பாயைச் சேர்ந்த பி. சோ. உறுப்பினர் நாத்பாய் எழுந்து, 'எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு கணக்கிடுவது, ஜனநாயகம் பற்றிய மிகக் குறுகிய பார்வையாகும் என்று கூறியிருக்கிறார்.

பந்த்:— "அதுதான் நான் விளக்க விரும்பும் அம்சம். இருமொழி பம்பாய் மாநிலம் பற்றிப் பேசும்போது, நீங்கள் இந்த எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு பேசாதீர்கள் என்கிறேன், நான். ஆனால் நீங்களோ இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் நான் நடக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அதில் தான் தவறு இருக்கிறது."

தொடர்ந்து பேசிய பண்டித பந்த், இருமொழி பம்பாய் ஏற்பாட்டிற்கு குஜராத், பம்பாய், மாரத்தி ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்துள்ள பெரும்பான்மையினரின் ஆதரவு கிடைத்திருக்கிறது என்றும், இந்த ஏற்பாட்டை எதிர்ப்பவர்களிடை உடன்பாடு இல்லை என்றும், அவர் கூறியிருக்கிறார்.

வேலையில்லாத் திண்டாட்டம்

மாநிலங்களிடமிருந்து விபரம் கேட்கிறதாம் மத்திய சர்க்கார்

புதுடில்லி, மே. 17—

பொதுவான வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய விவரங்களையும், முக்கியமான திட்டங்களில் எத்தனை பேருக்கு வேலை தரப்பட்டது என்ற விபரங்கள் பற்றியும் மாநிலங்களிடமிருந்து தகவல் கேட்டிருப்பதாக மக்கள் சபையில், மந்திரி நந்தா தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபையில் எழுந்த பல கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் இந்தத் தகவல்களை ஆண்டுதோறும் தருமாறு மாநிலங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன என்றும், ஏற்கனவே சில மாநிலங்கள் தகவல்களைத் தந்து விட்டன என்றும் கூறியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—5—57 சனி

‘பகற்கொள்ளை’

‘நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் மந்தைக்கு இரண்டு ஆடு கேட்கும்’ என்பார்கள். அதேபோன்றுதான் மத்தியப் பேரரசின் நிதி அமைச்சராக இருந்துவரும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நடந்துகொண்டிருக்கின்றார்.

தென் சென்னை மக்கள், கொஞ்சம் முன் யோசனையுடன் எதிர்காலத்தைக் கூர்மையாக ஆராய்ந்து, தேர்தலில் அப்பெரியவரை மண் கவ்வச் செய்திருந்தால், அவரால் இப்பொழுது இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அனைவருக்கும் ஏற்படப்போகும் பெருங்கேட்டினைக் கண்டிப்பாகத் தவிர்த்திருக்கக்கூடும். அவர் பெறக்கூடிய தோல்வியின் விளைவாக இரண்டாவது திட்டத்தின் விரிவும், அதற்குரிய பெருந்தொகைச் செலவும் கணிசமாகக் குறைந்திருக்கக்கூடும். அதனால், தாங்க முடியாத வரிச் சுமையைக் கண்டிப்பாகத் தாங்கித் தீரவேண்டிய நெருக்கடியான நிலைக்கும் பொதுமக்கள் ஆளாக வேண்டிய கட்டாயம் பிறந்திருக்காது.

அவருடைய தேர்தல் வீழ்ச்சி, இந்தியப் பேரரசின் பொருளாதார அடிப்படை இலட்சியத்திற்கே பொது மக்களால் தரப்பட்ட சம்மட்டி அடியாக அமைந்திருக்கக்கூடும். தென்னாட்டின் தொழில் முன்னேற்றத்தில் பற்றுதல் இல்லாது வடநாட்டின் தொழில் ஆக்கத்திலேயே கருத்துச் செலுத்திவரும் இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கிற்கும் அளிக்கப்பட்ட பெருங் கண்டனமாக அவ்வீழ்ச்சி இருந்திருக்கக்கூடும். அதுவுமன்றி, தென்னாட்டு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திக்கொண்டு வரும் தனது அரசியல் ஆதிக்க வெறியைத் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற நல்லறிவை இந்தியப் பேரரசு கொள்ள முன்வந்தாலும் வந்திருக்கக்கூடும்.

அவருடைய வெற்றி மேற்குறிப்பிட்ட நல்விளைவுகளுக்கு இடமில்லாது செய்துவிட்டதுடன் நின்றுவிடாது, மேலும் மேலும் பொதுமக்களைத் துன்புறுத்தவும் தொடங்கிவிட்டது. இவ்வளவும் நாம் ஏற்கனவே எதிர்பார்த்ததேயாகும்.

சர்க்கரைக்கு வரி; தேயிலைக்கு வரி; காபிக்கு வரி; புகையிலைக்கு வரி; வத்திப்பெட்டிக்கு வரி; மண்ணெண்ணெய்க்கு வரி; பெட்ரோலுக்கு வரி; டீசல் எண்ணெய்க்கு வரி; வெஜிடபிள் எண்ணெய்க்கு வரி; காகிதத்திற்கு வரி; இப்படி வரி வரி என, நாட்டு மக்களுக்கு ‘நல்வாழ்வை’ வரையாது வழங்கி இருக்கின்றார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

மேற்குறிப்பிட்டுள்ள வரிகள் ஒவ்வொன்றினாலும் பாதிக்கப்பட இருக்கின்றவர்கள் சாதாரண குடிமக்களேயாவர். ஆலைத் தொழிலாளர், இப் புது வரிகளினால் தொல்லைக்குள்ளாவர். நடுத்தர மக்கள் அனைவரையும் இப் புது வரிகள் துன்புறுத்தும்.

இப் புது வரிவிதிப்பின் விளைவாக சர்க்கரையின் விலை கூடிவிடும். தேயிலைமீது போடப்பட்டுள்ள புது வரியின் பலனாக நாம் அருந்தும் தேநீருக்கு அதிகக் காசு கொடுக்க வேண்டும். புது வரிக்கு ஆட்பட்டுள்ள காப்பியின் கதியும் அதுவேதான்.

புது வரியின் காரணமாக சர்க்கரை மட்டுமே விலையில் கூடிவிடும் என்பதில்லை. அதனால் வெல்லத்தின் விலையும் கூடிவிடக்கூடும்.

அதாவது, சர்க்கரைவிலையேற்றத்தின் காரணமாக, இதுவரை சர்க்கரையைமட்டுமே பயன்படுத்திக்கொண்டு வந்தவர்கள், தங்கள் சர்க்கரை தேவையின் ஒரு பகுதியை வெல்லத்தை வாங்கிப் பயன்படுத்துவதின் மூலம் சரிகட்ட முன்வருவர். அந்த நிலையில் வெல்லத்தின் விலை இப்பொழுது இருப்பதை விட கணிசமாகக் கூடிவிடக்கூடும். அதன் காரணமாக, எப்பொழுதும் வெல்லத்தையே பயன்படுத்தி வந்திருப்பவர்களும், வெல்லத்தை முன்னிலும் கூடுதலான விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டியவர்களாகின்றனர். எண்ணெய் விவகாரமும் அதேபோன்றதுதான்.

இப்புது வரிகள் மூலம் நிதி அமைச்சர் எதிர்பார்க்கின்ற வருமானம் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும். அல்லது எதிர்பார்ப்பதற்கு மாறாக, வருமானம் கூடாததோடு மட்டுமல்லாது, வரி விதிப்புக்கு ஆளான தொழில்களில் மந்த நிலை ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்.

நடுத்தர மக்கள், தொழிலாளர், சாதாரண மக்கள் என்ற மூன்றுவகை மக்களும், ஏற்கனவே மூல உணவுப் பொருளான அரிசியையும், பருப்பு வகைகளையும், மற்ற முக்கிய உணவுப் பொருட்களையும் அதிக விலை கொடுத்தே வாங்கி வருகின்றனர். அரிசியின் விலை தினம் தினம் உயர்ந்து கொண்டே போகிறது. மேற்குறிப்பிட்டுள்ள மூன்று வகை மக்களும் பெறுகின்ற வருமானம், அவர்களுடைய வாழ்க்கைச் செலவை ஈடு செய்வதாக இல்லை. ஏதோ சம்பாதிக்கின்றோம், சாப்பிடுகின்றோம், காலம் வந்ததும் சாகப் போகின்றோம் என்ற நிலையில் உயிருடன் இருந்துவருகின்றவர்களாவர். இதைத் தவிர, அவர்கள் அனைவரும் வாழ்க்கையைச் சுவையுடன் அனுபவித்து வருகின்றனர் எனச் சொல்லுவதற்கு எவருக்கும் துணிவு ஏற்படாது.

இவர்களைப் பார்த்துத்தான், சர்க்கரைக்கு அதிக விலை கொடு—தேயிலைக்கு அதிக விலை கொடு—காப்பிக்குக் கூடுதலாகக் கொடு—என்று நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கெடுபிடி செய்ய முனைந்திருக்கின்றார்.

இன்றியமையாப் பொருட்களின் விலை, புது வரிவிதிப்பின் காரணமாகவும், பெரும் பெரும் வியாபாரிகளுடைய பேராசை காரணமாகவும் அதிகரிக்கப் போவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

புது வரி விதிப்புக்காளான பொருள்களின் விலை ஏற்றத்தின் பலனாக, நாப்பதி முதல் மற்ற பொருட்கள் அனைத்தும் தவிர்க்க முடியாத சூழ்நிலையின் காரணமாக விலை கூடப் போவதும் உண்மையிலும் உண்மையாகும்.

அந்த நிலையில், தொழிலாளர்கள் கூலி உயர்வு கோருவர். அரசாங்க ஊழியர்கள் பஞ்சப்படியை உயர்த்தக் கோருவர் அல்லது அரசாங்கமே முன்வந்து உயர்த்தியாக வேண்டும். மற்ற தொழில்களில் ஈடுபட்டு வரும் சாதாரண மக்களும், தம் தம் தொழிலின் பண மதிப்பை உயர்த்திக்கொள்ள முயற்சிப்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் புது வரி விதிப்பு இத்தகு பேராபத்தைக் கொண்டதாக இருக்கிறது.

இதுபற்றி மக்கள் சபை உறுப்பினர்கள் சிலர் கருத்தறிவித்துள்ளனர். ‘பகற் கொள்ளைபோ இது’ என்கிறார் பானர்ஜி என்ற சுயேச்சை உறுப்பினர்.

‘தலையைச் சுற்றவைக்கிறது’ என்கிறார், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பெரோஸ் காந்தி;

‘மக்களுக்கு மாபெரும் நம்பிக்கைத் துரோகம்’ என்கிறார் மற்றொரு உறுப்பினர்.

‘பாமர மனிதனின் இடுப்பை ஒடிக்கின்றது’ என்று குறிப்பிடுகிறார் ஒரு உறுப்பினர்.

‘பணக்காரர்களுக்கு நிவாரணமளித்து, சாதாரண மனிதனின் சுமையை ஏற்றுகிறது! என்கிறார் சிம்மாசன்சிங் என்ற காங்கிரசு உறுப்பினர்.

‘மூன்று மாதத்திற்குமுன் இந்த வரவு செலவுத் திட்டம் வந்திருந்தால் காங்கிரசு இன்று அதிகார பீடத்தில் இராது.’

இப்படி சிவன்லால் சாக்சேனா என்ற சுயேச்சை உறுப்பினர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

கல்வியின் தரம் குறைந்துவரும்போது மாணவரிடை அரசியல் பிரச்சாரமா?

காங்கிரசின் ‘நச்சுச் சோதனை’க்குக் கண்டனம்

“நாட்டிலுள்ள இளைஞர்களோடு அதிகத் தொடர்பு கொள்வது இன்றியமையாதது என்ற எண்ணத்துடன் காங்கிரசு மேலிடத்தார் சில திட்டங்களை வகுத்து வருவதாகப் புதுடில்லிச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

“இதற்காக, ஒவ்வொரு மாகாணக் காங்கிரசுக் குழுவும் முழு நேர உழைப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், அவருடைய ஊதியத்தின் 50 சதவீதத்தை அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் அலுவலகம் ஏற்றுக்கொள்ளுமென்றும் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. ஐந்து மாகாணக் காங்கிரசுக் குழுக்கள் இவ்வாய்ப்பை இதுகாறும் பயன்படுத்தியிருப்பதாகப் புலப்படுகிறது. எஞ்சியுள்ள காங்கிரசு அமைப்புகளும் இத்துறையில் ஊக்கம் செலுத்தி, பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலுமுள்ள மாணவர்களோடு கூட, ஆசிரியர்களும், காங்கிரசோடு ‘நெருங்கிய தொடர்பு’ கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

“இந்நெருங்கிய தொடர்பினால் நேரக்கூடிய விளைவுகள் ஆராயத்தக்கன. மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் மாகாணக் கல்வி ஆணையாளர்கள் விடுத்துள்ள கட்டளையே இதுகாறும் பொதுவாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. இக்கட்டளையை மறைமுகமாகப் புறக்கணிக்கும் தன்மையில் புதியதொரு முயற்சி தொடங்குவது மாணவர்களின் நலத்திற்கோ, கல்வித்துறையின் வளர்ச்சிக்கோ உடன்பாடானதாகத் தெரியவில்லை.

“அரசாங்கத்துறையில் நிருவாகப் பொறுப்பேற்றுள்ள காங்கிரசின் கொள்கை, மாணவர்கள் அரசியலில் பங்கெடுப்பது தவறு என்பதாகும்; ஆனால், அரசியல் துறையில் பொதுமக்களின் ஆதரவைத் தொடர்ந்து பெற விரும்பும் காங்கிரசின் நோக்கம், மாணவர்களிடையே பிரச்சாரம் செய்து அவர்களைக் காங்கிரசோடு இணைந்த மனப்பான்மையுடையவர்களாகச் செய்யவேண்டும் என்பதுதான்.

“காங்கிரசு மேலிடத்தார் ஆணையின்படி நடந்துவரும் ஐந்து மாகாணங்களோடு மற்ற மாகாணங்களும் ஒன்று சேர்ந்தால், நாடெங்குமுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும், காங்கிரசோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு விரிவானதும் உறுதியானதுமான திட்டம் வகுக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய தொடர்புத் திட்டம் காங்கிரசோடு மட்டும் நிற்காது; மற்ற அரசியல் கட்சிகளும், முழு நேர உழைப்பாளர்களையோ, அல்லது பகுதிநேர உழைப்பாளர்களையோ நியமித்து, தத்தம் கட்சிகளின் கொள்கைகள், குறிக்கோள்கள், செயல் முறைத் திட்டங்கள் முதலியவற்றிற்கு மாணவர்களிடையே ஆதரவு தேட முயற்சி செய்யுமென்பது திண்ணம்.

“அப்போது கல்வி நிலையங்கள், அரசியல் கட்சி அரங்கங்களாக மாறுமலிருக்க முடியுமா? இப்போதுள்ள நிலையிலேயே, கல்வியின் தரம் குறைந்துகொண்டே செல்கிறதென்ற குற்றச்சாட்டு வலுப்பெற்று வருகின்றது. அரசியல் கட்சிகள் மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்ட பிறகு ஏற்படும் நிலையைப் பற்றி விளக்கத் தேவையில்லை.

“இந் நச்சுச் சோதனையால் கல்வியின் தரம் மட்டுமல்ல—கல்வியின் அடிப்படையே சீர்கேடடைந்துவிடும்.

“வருங்கால சமுதாயம் இப்போது கல்வி பயிலும் மாணவர்களே யாதலால், இம்முயற்சி பெருங்கேடு விளைவிக்கத்தக்கது. ஆகையால், செய்யத்தகாத செயலில் ஈடுபடாமலிருப்பதே சிறந்ததாகும்.”

—இவ்வாறு ‘நச்சுச் சோதனை’ என்ற தலைப்பில், 14—5—57 ‘தமிழ்நாடு’ இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

மாநிலத்தில் உணவு விலை ஏற்றத்திற்குக் காரணம் என்ன?

அமைச்சர் பக்தவத்சலம் ‘கண்டுவிட்டேன்’ என்கிறார்

சென்னை, மே 16—

மாநிலத்தில் உணவுப் பொருள் விலை ஏற்றத்திற்கான காரணத்தினை, கடைசியாகக் கண்டுபிடித்துவிட்டாராம் மந்திரி பக்தவத்சலம்!

இரு காரணங்களாம்

மாநிலத்தில் உணவுப் பொருள் அழிவு முன்னைவிட அதிகமாகிவிட்டதாம்! அது ஒரு காரணமாம், விலை ஏற்றத்திற்கு!

மற்றொன்று, கேரள மாநிலத்திற்கு அரிசி ஏற்றுமதியாகிவிடுகிறதாம்!

இந்த ஆண்டு, வழக்கத்தைவிட இரண்டு மடங்கு—அதாவது இரண்டு இலட்சம் டன் அரிசி சேரளத்திற்கு ஏற்றுமதியாகியுள்ளதாம்! அங்கு, அரிசிக்கு, ஆசையூட்டத்தக்க விலை கிடைக்கிறதாம்! இந்த ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலை இல்லையாம்!

இவைதான் இங்கு அரிசி விலை ஏற்றத்திற்குக் காரணமாம்!

மேலும், ஆந்திர மாநிலத்திலிருந்து உபரியாக உள்ள அரிசி இந்த மாநிலத்திற்கு வருவதில்லையாம்! வழக்கமாக இந்த மாநிலத்திற்கு விற்பனைக்குவரும் அரிசி இங்கு வாராததும் இங்கு விலை ஏற்றத்திற்கு ஒரு காரணமாம்!

பரிகாரம்

இதற்குப் பரிகாரமாக மந்திரி பக்தவத்சலம், டில்லி சர்க்காருக்கு ஒரு யோசனை கூறியுள்ளாராம்; அதாவது, தென் பிராந்திய மாநிலங்களின்—ஆந்திர, கேரள, கன்னட, தமிழ்நாட்டு மாநிலங்களின் உணவு மந்திரிகள் மாநாடு ஒன்றைக் கூட்டி, பிரதேசத்தின் உணவுநிலை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதுதான் யோசனையாம்!

நெய்வேலி நிலக்கரி

1960-ம் ஆண்டில்தான் வெட்டி எடுக்கப்படுமாம்

புதுடில்லி, மே. 16—

நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுக்கும் வேலைக்குத் தேவையான இயந்திரங்களின் முதல் 1958-ம் ஆண்டு துவக்கத்திலும், இறுதிப் பகுதி 1959-ம் ஆண்டின் இறுதியிலும்தான் வெளிநாட்டிலிருந்து கிடைக்குமென்றும், எனவே 1960-ம் ஆண்டு மத்தியில் நிலக்கரி வெட்டி எடுப்பது ஆரம்பமானதென்றும் மக்கள் சபையில், கேள்வி நேரத்தின்போது அமைச்சர் சுவர்ண்சிங் கூறியுள்ளார்.

இம்மாதம் மே 20-ந் தேதி முதல் மண்ணை வெட்டி எடுக்கும் வேலை ஆரம்பமாகிறது.

நெய்வேலியில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி முதலில் அங்கு அமைக்கப்பட இருக்கும் மின்சார உற்பத்திச் சாலைக்குப் பயன்படுத்தப்படுமாம். இவ்வகையில் மின்சாரம் உற்பத்தியானதும், வீடு, கைத்தொழில் வேலைகளுக்கு உபயோகிக்கப்படுமாம்.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 50 கோடி முதல் ரூ. 60 கோடி வரை செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

1960-ம் ஆண்டு முதல் இந்தச் சுரங்கத்திலிருந்து ஆண்டுக்கு 35 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும்.

கழகச் செய்திகள்

ஈத்தாமொழி :

27—4—57 இரவு 7 மணிக்கு, தோழர் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற நாஞ்சில் மாவட்டம் ஈத்தாமொழி தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் யூ. சேக்மைதீன், செயலாளராகவும் எ. துரைசாமி துணை செயலாளராகவும், சி. தங்கமணி பொருளாளராகவும், எ. திரவியம் - பி. இ. கண்ணப்பா மாவட்டப் பிரதிநிதிகளாகவும் 10 பேர் செயற்குழுவினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கனியாபட்டி :

26—4—57ல் இவ்வூர் கிளையின் பொதுஉறுப்பினர்கள் கூட்டம், தோழர் கு. இலக்குமணன் தலைமையில் நடைபெற்றபோது, இரண்டு முக்கியத் தீர்மானங்களும், 11 புதிய செயற் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவனந்தபுரம் :

26—4—57 மாலை இவ்வூர் பொதுஉறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் டி. வி. சிவம் செயலாளராகவும், கே. எச். எம். சுபேர் துணைச் செயலாளராகவும், கே. சுப்பராயலு பொருளாளராகவும், 10 . பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பதி :

29—4—57ல், நடைபெற்ற திருப்பதி தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. கழக உறுப்பினர்களுக்கும், டில்லி மக்கள் சபை உறுப்பினர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சின்னமணலி :

26—4—57 காலை 10 மணிக்கு சேலம் மாவட்டம் சின்னமணலி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இரா. தாண்டவன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சோ. மாரியப்பன் செயலாளராகவும், சி. இராமன் துணைச் செயலாளராகவும், மு. பழனி பொருளாளராகவும், எ. கே. கே. இராசமாணிக்கம் மாவட்டப் பிரதிநிதியாகவும், 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குப்பிநாய்க்கனூர் :

28—4—57ல், சேந்தமங்கலம் குப்பிநாய்க்கனூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் என். பெரியசாமி தலைமையில் நடைபெறறபோது தோழர்கள் வி. காளியப்பன், ஆர். எம். பழனிமுத்து, ஆறு. முத்துசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

லக்கம்பட்டி :

29—4—57ல், லக்கம்பட்டி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் கே. என். கே. இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் கே. ரங்கராசு செயலாளராகவும், என். எம். அருணாசலம் துணைச்செயலாளராகவும், என். சி. நாராயணசாமி பொருளாளராகவும், இராமசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வீரகாலூர் :

28—4—57 மாலை 6 மணிக்கு, வீரகாலூரில், தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் தம்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றுவித்து கழகக் கொள்கைகளை விளக்கினார். தோழர்கள் முத்தமிழ்ச்செல்வன், தம்புசாமி ஆகியோரும் பேசினர்.

விளாப்பாக்கம் (வ. ஆ.)

23—4—57 மாலை 6 மணிக்கு தோழர் எ. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், முக்கிய 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அறந்தாங்கி — பாக்குடி :

28—4—57-ல், அறந்தாங்கி வட்டத்தைச் சேர்ந்த பாக்குடியில், தோழர் நா. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் நா. இலககுமணன் செயலாளராகவும், சித. கருப்பையா துணைச் செயலாளராகவும், பொருளாளராக ஆர். எம். இராசுவும், :மாவட்டப் பிரதிநிதியாக குமாரசாமியும் மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிறுவயலூர் :

28-4-57-ல், சிறுவயலூர் தி.மு. கழக அமைப்புக்கூட்டம் தோழர் அ. கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எஸ். சிதம்பரம் செயலாளராகவும், கே. வி. பாலுசாமி துணைச் செயலாளராகவும், ஆர். ரெங்கராசு பொருளாளராகவும், எம். செங்குட்டுவன் மாவட்டப் பிரதிநிதியாகவும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சின்னசீரகபாடி

28—4—57ல், சின்னசீரகபாடி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இரா. தாண்டவன் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் நா. சிவலிங்கம் செயலாளராகவும், பெ. கந்தசாமி துணைச் செயலாளராகவும், கே. மாரிமுத்து பொருளாளராகவும், அ. கருப்பையன் மாவட்டப் பிரதிநிதியாகவும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குன்னத்தூர் :

28—4—57ல், குன்னத்தூர் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் மலைச்சாமி செயலாளராகவும், இராசேந்திரன் துணைச்செயலாளராகவும், மு. பாண்டியன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரம்பலூர் :

27—4—57ல். பெரம்பலூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் குணசேகரன் செயலாளராகவும், சுந்தரராசன் துணைச்செயலாளராகவும், செயச்சந்திரன் பொருளாளராகவும், இரத்தினசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நாகூர் :

30—4—57ல் நாகூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் ந. மாரியப்பன் தலைமையில் நடைபெற்றபோது வெற்றி பெற்ற தி. மு. கழக தோழர்களுக்குப் பாராட்டு கூட்டம் நடத்தவும், மேலும் 4 புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தும், தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

கோவை :

28—4—57ல், கோவை 6-வது வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் சி. டி. தண்டபாணி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் கே. செல்லைய்யா செயலாளராகவும், ஜி. தேசிகன் துணைச்செயலாளராகவும், க. சண்முகம் பொருளாளராகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தவுட்டுப்பாளையம்

27—4—57ல், தவுட்டுப்பாளையம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் டி. சி. இராமசாமி செயலாளராகவும், டி. பி. பாலுசாமி துணைச் செயலாளராகவும், டி. ஆர். வெங்கிடுசாமி பொருளாளராகவும், வி. செகநாதன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 12 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம் 27-வது வட்டம் :

28—4—57ல், சேலம் 27-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் வி. பெருமாள் தலைமையில் நடைபெற்றபோது, அதே வட்டத்தில் உட்கிளை ஒன்று நிறுவுவது என்றும் கழகப் பொதுக் கூட்டங்கள் நடத்தி கொள்கை விளக்கம் இல்லாத இடங்களில் விளக்கம் தருவதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம் 31-வது வட்டம் :

28—4—57ல், சேலம் 31-வது வட்டம் பென்ஷன் லைன், தி. மு. கழகச் சார்பில் தோழர் பெருமாள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஈ. ஆர். கிருட்டிணன், சிற்றுளி-சுப்பிரமணியம் ஆகியோர் கழகத்தின் ஜனநாயகம் பற்றிப் பேசினார்கள்.

சேலம்- சஞ்சீவிராயன்பேட்டை:

28—4—57ல், சேலம் சஞ்சீவிராயன்பேட்டை தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் கண்ணதாசன் அவர்களால் துவக்கப்பட்டது; தோழர்கள் ஈ. ஆர். கிருட்டினன் சிற்றுளி-சுப்பிரமணி ஆகியோர் கழக கொள்கை பற்றி விரிவுரையாற்றினர்.

சேலம்-தாதகாப்பட்டி :

28—4—57ல், சேலம்-தாதகாப்பட்டியில் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஈ. ஆர். கிருட்டிணன் சிற்றுளி-சுப்பிரமணியம், எஸ். எ. அன்புக்கரசு. ஆர். பி. இராமசாமி ஆகியோர் கழகத்தின் கொள்கைகளை விளக்கியபின் தோழர் கண்ணதாசன் அவர்கள் தி. மு. கழகத்தின் ஜனநாயகப் பண்பு குறித்து பேசினார்.

கருமலை :

28—4—57 பகல் 9 மணியளவில், கருமலை வட்ட தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் வெற்றி விழாப் பொதுக்கூட்டம் தோழர் இரா. பிச்சமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆங்காங்குள்ள கிளைகளின் சார்பில் பெரியதோர் ஊர்வலமாக வந்து கலந்துகொண்டனர். தோழர்கள் கோவை - இராமநாதன், மதுரை-சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தேனி :

29—4—57ல், தேனி தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் ஆர். கருப்பையா செயலாளராகவும், கு. வெள்ளைசாமி துணைச்செயலாளராகவும், எஸ். எஸ். இராசு பொருளாளராகவும், மு. தங்கராசு மாவட்டப் பிரதிநிதியாகவும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மணக்காடு :

29—4—57 இரவு 7½ மணிக்கு மணக்காடு தி. மு. கழகத் துவக்க விழா தோழர் புலவர்-இராமசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் அறிவுடைநம்பி, சிவகுருநாதன், மு. இறையருள், ம. ரா. மணிமொழி ஆகியோர் கழகக் கொள்கை பற்றி விரிவுரையாற்றினர்.

திருச்சி 14-வது வட்டம்

28—4—57 சுமார் 10 மணிக்கு மேற்படி கிளை அமைப்புக் கூட்டம், கருணாநிதி பார்க்-என். எஸ். பங்களாவில், தோழர் பெத்தாம்பாளையம் - பழனிச்சாமி தலைமையிலும், நாஞ்சில் - கி. மனோகரன் முன்னிலையிலும் நடைபெற்றது; தோழர்கள் மு. நக்கீரன் செயலாளராகவும், இரா. சேதுராமன் துணைச் செயலாளராகவும், முத்தையா பொருளாளராகவும், அன்புத் தம்பி நகரப் பிரதிநிதியாகவும், 8 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புத்தவேடு :

29—4—57-ல், புத்தவேடு தி. மு. கழக ஆண்டு விழா தோழர் மு. சி. முனுசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, சுரதா, தி. ந. சம்பந்தம், பி. சின்னசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சி :

28—4—57-ல் திருச்சி 28-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் அமைப்புக் கூட்டம் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் நா. சுப்பிரமணியம் செயலாளராகவும், முகமது இப்ராகிம் துணைச் செயலாளராகவும், டி. அகிலாண்டம் பொருளாளராகவும், அ. மகமது உசேன் நகரப் பிரதிநிதியாகவும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைநகரில் புத்தர் விழா

மந்திரி பக்தவத்சலம் தலைமையில்

சத்தியவாணிமுத்து சொற்பொழிவு

14—5—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—எழும்பூர் கென்னட் சந்து, 10 எண்ணுள்ள இல்லத்தில், சென்னை மகாபோதி சங்கத்தாரால், புத்தரின் 2501 வது 'பரிநிர்வாண' விழாவின் 2-ம் நாள் நிகழ்ச்சி, அமைச்சர் திரு. பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்றது.

தோழர் தியாகராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தோழியர் சாரதாம்பாள் விழாவின் நோக்கத்தையும், இவ்விழா நாட்களில் அரசியலார் விடுமுறை அளிக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

பின்னர், அமைச்சர் அவர்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"புத்தர் நமது நாட்டில் பிறந்தாரென்று நாம் பெருமைப் படுகிறோம்; அவருடைய விழாக்களை வேற்று நாட்டில் கொண்டாடுவது பற்றியும் நாம் பெருமைப் படுகிறோம். ஆனால், மற்ற மற்ற திருவிழாக்களை கொண்டாடி வருகின்ற நமது மக்கள், புத்தர் திருவிழாவைக் கொண்டாடுவதில்லை; அவரது அருமை பெருமைகளை உணரவில்லை. புத்தர் அன்பு நெறியை மக்கள் கடைபிடிக்க வேண்டுமென பாடுபட்டார். திருவள்ளுவர்கூட, 'அன்பு இல்லாதவன் மனிதன் அல்ல; எனக் குறிப்பிட்டதுடன் நில்லாது, 'அவன், பிணத்திற்குக் கூட சமமல்ல, என்று கூறியிருக்கிறார்; மனிதனுக்கு அன்பு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தியிருக்கிறார். அதைத்தான் புத்தர் உபதேசித்தார். 2500 ஆண்டுகளுக்கு முன் உபதேசித்தார். நாம் அவர் கூறிய போதனைகள் முழுவதையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

"வைசாக பௌர்ணமியன்று தோன்றினார். புத்தர். அந்த நாளைக் கொண்டாடி வந்தால், ஓரளவு அவரது கொள்கைகளும் மக்கள் மனதில் பதிய முடியும்.

அடுத்து பேசிய டாக்டர் ஐயப்பன் அவர்கள், புத்தர் நெறியின் மேன்மையை விளக்கியும், புத்தர் நெறிக்கும் மற்ற நெறிகளுக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கியும் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அடுத்து, திரு. ஆர். பி. தங்கவேலு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஆசியாக் கண்டத்தில் தோன்றிய ஒளி இன்று உலகெங்கும் பரவியிருக்கிறது; இவ்வொளியை —இந்த ஞான ஒளியை 'மணிமேகலை' என்ற இலக்கியத்தில் வெகு அழகாக அதன் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் எழுதியிருக்கின்றார்.

"புத்த நெறி எல்லா மக்களுக்கும் அன்பையும் அமைதியையும் காட்டுகின்ற ஒரு சிறந்த நெறியாகும். புத்தர் நெறி கூறுவது, எது பகுத்தறிவுக்கு பொருந்தி வருகிறதோ அதுதான் புத்த நெறியாகுமென்றும், அனுபவத்திற்கும் அறிவிற்கும் ஒத்துவாராதவை புத்த நெறியல்லவென்றும் கூறுகிறது.

பின்னர் தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"புத்தர் பெண்களுக்கு என்ன சொன்னார் என்று நாம் பிரிப்பதைவிட இந்தச் சமுதாயத்திற்கு என்ன சொன்னார் என்று, பார்ப்பதே நல்லதாகும். புத்தர் 2500 ஆண்டுகளுக்குமுன் சொன்னவை, எந்தக் காலத்திற்கும்—எந்த தேசத்திற்கும்—எந்த மக்க மக்களுக்கும் பொருந்தி வருகிறது. "அரசவம்சத்தில் தோன்றிய புத்தர் என் சுகபோகத்தை விட்டு வந்தார் என்றால்—ஒரு பெரிய பதவியிலிருந்து புத்தர் வெளியேறினார் என்றால், ஏழை மக்களின் துயர்களைக் களையவும், அவர்களின் வாழ்வு சிறப்பானதாக இருக்கவேண்டுமென்பதற்காகவும்தான்! மனிதன், தன் பகுத்தறிவைக் கொண்டு சிந்திக்காமல், மூடநம்பிக்கையைப் பின்பற்றுவதைக் கண்டு, அவர்களைத் திருத்துவதற்காகப் பணியாற்ற முன்வந்தார்.

"புத்தர் நெறி, 'நீ வாழு - நீ முன்னேறு - நீ நன்றாக வாழ முற்படு' என்ற முறையில் அமைந்திருக்கிறது. புத்தர் நெறி - கற்பழித்தல், ஒழுக்கத்தை விட்டு நீங்குதல், தீண்டாமைக் கொள்கை, மது அருந்துதல் முதலியவை ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது; தீச்செயல்கள் ஒழிக்கப்படுதல் வேண்டும் என்று கூறுகிறது.

"இவைகளை ஒழித்தால்தான் நல்ல முறையில் வாழ முடியும் - வாழ வேண்டும் என்று புத்தர் நெறி கூறுகிறது.

"இரவீந்திர நாத் தாகூர் தன்னுடைய 'கீதாஞ்சலி' நூலில், ஆண்டவன் எங்கே என்பதை உணர்த்தும்போது, 'ஆண்டவன் கோயில் மூலையில் இல்லை; பாடுபடும் மக்களிடைதான் அவன் இருக்கிறான்" என்று கூறுகிறார்.

"அதேபோல புத்தர், 'மக்களிடம் ஜீவகாருண்யமாக இருங்கள்; ஜீவகாருண்யமே கடவுள்; என்று கூறுகிறார்.

"அந்த அறிவுப் பிரச்சாரத்தைத்தான் நாம் செய்து வருகிறோம். பெண்களை மட்டும் ஒதுக்கிவிடவில்லை புத்தர். அறநெறி பற்றி பெண்கள், புத்தரிடம் உபதேசம் பெற்றிருக்கிறார்கள்; சேவை செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு மாதவி - மணிமேகலை ஆகியோரின் வரலாறே சான்றாகும். புத்தர், சாதிப் பிரிவினைகளையும், பிற்போக்குக் கொள்கைகளையும் நீக்கப் பாடுபட்டார்; அவைகளைப் போக்க, புத்த பிட்சுக்கள், புத்தர் நெறிகளை மக்களிடம் பிரச்சாரம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

இறுதியாக திரு. பி. எஸ். அருள் தங்கையா அவர்கள், புத்த நெறியின் மேன்மையைப் பற்றி விளக்கியபின், தோழர் எம். ருடல்தாஸ் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

‘உலகத்திற்கு பாராளுமன்ற ஜனநாயகமே சிறந்தது’

‘ஐந்தாண்டுத் திட்டத்தில் கேரளத்திற்கு அநீதி’

முதன் மந்திரி நம்பூதிரிபாட் காரணம் காட்டி விளக்குகிருர்!

“மக்கள் தொகை அடிப்படைப்படி பார்த்தால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கேரளத்திற்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ளதைப் போன்று இரண்டு மடங்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், கேரளம் அதிக மக்கள் தொகை உடையது என்ற காரணத்தினுல், அதன் வளர்ச்சிக்கு இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கியிருக்க வேண்டும்.

“கேரளத்திற்கு நியாயமாக ரூ. 180 கோடி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனுல், ரூ. 87 கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளது.”

என்று, கேரள முதன் மந்திரி ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட், டில்லிப் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

தொடர்ந்து கேட்கப்பட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

கனரகத் தொழில்கள் வேண்டும்

“கனரகத் தொழில் நிறுவ கேரளம் பொருத்தமான இடம் அல்ல என்று கூறப்படுவதை நான் ஏற்பதற்கில்லை.

ஏகபோகமா?

“இரும்பு - உருக்குத் தொழில்களும், வேறு சில அடிப்படைத் தொழில்களும் ஓரிரு மாநிலங்களின் ஏகபோக உரிமையாகி விடக்கூடாது.

“கேரளத்தில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலையும், ஒரு டயர் உற்பத்தித் தொழிற்சாலையும் நிறுவ முடியும்.

பங்கு கிடைக்கவில்லையே

“கேரளத்தில் பெருவாரியாக பணப் பயிர்கள் விளைகின்றன. மத்திய சர்க்காருக்கு அவை ஏராளமான வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகின்றன. ஆனுல் அவை எங்களுக்கு தகுந்த நியாயமான அளவு பலன் தருவதில்லை.

எதிர்க்கவில்லை

“மத்திய சர்க்கார் எங்களை எதிர்க்கும் நோக்குடன் இல்லை; மாருக, கேரளத்திற்கு உதவி புரியக்கூடியதாகவே இருக்கிறது!”

தேசீய மயம்

அன்னியர் வசமுள்ள தோட்டங்களை தேசீய மயமாக்குவது பற்றிக் கேட்கப்பட்டபோது நம்பூதிரிபாட், ‘மாநிலத்திற்கு அந்த அதிகாரம் இல்லை என்ருலும், மத்திய சர்க்காரைக் கோருவதற்கு உரிமை இருக்கிறது; கோருவதில் தவறில்லை’ என்ருர்.

ஜனநாயகம்

‘மத்திய சர்க்காரோ அல்லது இதர மாநிலங்களில் பெரும்பான்மையானவையோ, உங்கள் கொள்கைகளை ஏற்கவில்லையானுல் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டபோது, நம்பூதிரிபாட், ‘பெரும்பான்மையினரின் முடிவு தவருனது என்று குறித்துக் கொள்வோம்: ஆனுல் மெஜாரிட்டி முடிவுக்குக் கட்டுப்பட்டுத் தொடர்ந்து காரியங்களைக் கவனிப்போம் என்று கூறியிருக்கிருர்.

நம்பிக்கைதானும்

‘கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்துள்ளதால், பாராளுமன்ற ஜனநாயகத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை பிறந்துவிட்டதா? என்று கேட்கப்பட்டபோது, ‘உலகில் எல்லா நாடுகளுக்குமே பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிதான் சிறந்தது என்று நாங்கள் நம்புகிரேம்’ என்று தெரிவித்திருக்கிருர்.

‘நெறி தவறிய அரசியல் கூடாது’

நீர்வளிகுண்டு பற்றி நேரு

“சரித்திரத்திலேயே முதல் தடவையாக மனித சமுதாயம் அழிந்துவிடக்கூடிய நிலை உலகத்தை எதிர்நோக்குகிறது.

“நீர்வளிக்குண்டை மற்றவர்களுக்குத் தீமை விளைவிக்கப் பயன்படுத்திஞல் அது, உலகத்திற்கே தீமை விளைவிக்கக் கூடும்.

“உலக நாடுகளும், கோஷ்டிகளும் தங்களைப் பற்றியே சிந்தித்தும், பிறரை மறந்தும் செயல்படுவது, அரசியலில் நெறி தவறிய முறையாகும்.

“மனிதனுடைய சிந்தனை வேறு வழிகளில் திரும்பவேண்டும். இராணுவ பலம், பெரிய ஆயுதங்கள் என்ற ரீதியில் சிந்திக்காமல் கருணை, மனித சுதந்திரம் என்ற அடிப்படையில் சிந்தனை செல்லவேண்டும்.”

இவ்வாறு, பண்டித நேரு, கொழும்பு நகர சபைத் தனக்களித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டித நேருவுக்கு நேரமிருக்காதாம்!

ஒற்றுமை—நட்பு இருப்பதாக இலங்கைப் பிரதமர் கூறுகிருர்

கொழும்பு, மே 17—

தற்போது இந்தியாவுக்கும்—இலங்கைக்கும் ஒற்றுமை இருப்பதாகவும், இதற்கு முக்கியக் காரணம் பண்டித நேருவிடம் தனக்குள்ள நட்புதான் என்றும், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு பண்டித நேருவுக்கு நேரமிருக்காது என்றும் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரே சரியாக இயக்குவதற்கு இயலாத வாக்குப் பதிவு இயந்திரம்

தவருகக்கையாண்டதால்ஏற்பட்ட ‘பெருங் குழப்பம்’

புதுடில்லி, மே 17—

இந்தியப் பாராளு மன்றத்தில் வாக்குப் பதிவு செய்வதற்காக நவீன இயந்திர சாதனம் ரூ. $4\frac{1}{2}$ இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளதல்லவா? இந்த இயந்திரத்தை இன்று முதல்முறையாகக் கையாண்டபோது, உறுப்பினர்களிடையே பெருங்குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது.

சபையில் கூடியிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 305 மட்டுமேதானும்; ஆனுல், இந்த இயந்திரம் 405 பேர் சபையில் இருந்ததாகக் கணக்கு காட்டியுள்ளதாம்.

எவ்வாறு வாக்குப் பதிவு செய்வது என்பது அமைச்சர் நந்தாவுக்கே தெரியவில்லையாம்! அவர் தவருன பித்தானை அழுத்தியதால் அவருடைய வாக்கு அரசாங்கத்திற்கு எதிராகப் பதிவாயிற்ரும்!

வாக்குப் பதிவு செய்ய இரண்டு கைகளும் இருக்கவேண்டும் என்பதும் தெரியவந்தது. ஒரே ஒரு கையுள்ள ஒரு உறுப்பினர் வாக்குப் பதிவு செய்ய திணறிவிட்டாராம்! அவருக்கு உதவி புரிய பக்கத்தில் இருந்த உறுப்பினர் முற்பட, அவர் தன்னுடைய வாக்கை பதிவு செய்ய முடியாது போயிற்ரும்!

ஏற்பட்ட பரபரப்பில், சில உறுப்பினர் வாக்குப் பதிவு செய்யாமல் செயலற்றுப் போனுர்களாம்!

இத்தனை வேடிக்கைகள் நிறைந்த குழப்பத்திற்குப் பிறகு சபைத் தலைவர், எதிர்காலத்தில் தவறுகள் நேராதவாறு திருத்த முற்பட்டுள்ளார்.

‘எதிர்காலத்தில் சபையின் சிப்பந்திகள், அங்கமில்லா உறுப்பினர்களுக்கு உதவி புரிவார்கள்; இயந்திரத்தை, பொறியியல் சிப்பந்திகள் மேற்பார்வையிட்டு வருவார்கள்’ என்று சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

5,000 கிராமங்களில் பஞ்சத்தின் வேகம்!

20 இலட்சம் மக்கள் பட்டினி

முஸபர்பூர், மே 17—

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பஞ்சம் தலைகாட்டத் துவங்கிவிட்டுள்ளது. பகல்பூர் பகுதியில் மட்டும் 5,000 கிராமங்களில் கடுமையான உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாம்.

தர்பங்கா மாவட்டத்தில் மட்டும் சுமார் 20 இலட்சம் மக்கள் உணவு கிடைக்காமல் திண்டாடுகின்றனராம்.

திருவத்திபுரம் ஊராட்சிமன்றதேர்தல்

பலத்தபோட்டிக்கிடையே கழகத் தோழர் தேர்வு

திருவத்திபுரம், மே 17—

திருவத்திபுரம் ஊராட்சி மன்ற மறு தேர்தலில், காங்கிரஸ், தி. க. - வினர் ஆதரித்த ஒரு தோழரையும், சோஷலிஸ்டு கட்சித் தோழர் ஒருவரையும் தோற்கடித்து, கழகத் தோழர் வி. குட்டியப்பன் மன்ற உறுப்பினராக வெற்றி பெற்ருர்.

அதை யொட்டி, 15—5—57ல், தோழர் வி. குட்டியப்பன் அவர்களைப் பாராட்டி ஓர் சிறப்பான ஊர்வலம் நடைபெற்றது.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே 19: காலை - குகை (சேலம்)
மாலை - சேலம்
20: மாலை - கபிலர்மலை
இரவு - பாண்டமங்கலம்
21: ஊரக்கரை
(திருச்சி மாவட்டம்)
22: சின்ஞளப்பட்டி
23: நத்தம்
24: வத்தலக்குண்டு
25: திருமங்கலம்
26: அருப்புக்கோட்டை

பாராட்டு விருந்து

19—5—57 மாலை, திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் வி. குட்டியப்பன் அவர்களைப் பாராட்டி, கழகத் தோழர்களால் ‘பாராட்டு விருந்து’ ஒன்று, தோழர் நாஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சென்னை-உடையார்பாளையம் வேலாயுதம் படிப்பகம்

19—5—57 அன்று, மேற்படி படிப்பக செயற்குழு, வண்ணை - சிமிட்ரி சாலையில் தோழர் பி. எம். முனுசாமி தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் இரா. செகநாதன், கு. அ. தாசன், கே. பன்னீர்செல்வம், நித்யானந்தம் ஆகியோர் படிப்பக வளர்ச்சி குறித்துப் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

முத்துப்பேட்டை—சித்தமல்லி:

20—5—57 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

அறிவுடைநம்பி
ந. தருமலிங்கம்
ம. அம்பிகாபதி
இரா. நடராசன்
ம. அரிஅரநாதன்

★

சேக்கிப்பட்டி:

(மதுரை மாவட்டம்)

மங்கைத் திடல்

20—5—57 மாலை 4 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: மு. க. இளமொழி

கொடியேற்றுபவர்:

பழ. இரத்தினம்

பேசுவோர்:

எஸ். மாதவன்
கே. எஸ். சந்தானம்
பெரி. அழகு
கட்டாரி, விமலன்
எஸ். சக்கரை
எஸ். இராமசாமி
அன்புமணி
எஸ். தமிழன்பன்

(தோழர்கள் ஜி. அழகப்பன், ஏ. மாரிமுத்து, எம். சாமிநாதன் ஆகியோரின் இன்னிசையும், இரவு 9-மணிக்கு ‘இலட்சிய வீரன்’ நாடகமும் நடைபெறும்)

★

ஆண்டாங்கோயில்:

(தஞ்சை மாவட்டம்)

21—5—57 மாலை 6 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: நல்லையா

பேசுவோர்:

என். வி. நடராசன்
சி. கிருஷ்ணமூர்த்தி
என். சாமிநாதன்

★

ஊரக்கரை:

21—5—57 மாலை 6 மணிக்கு

தலைவர்:

மு. பெ. முத்துக்கருப்பன்

பேசுபவர்: க. அன்பழகன்

★

திருப்புவனம்:

(இராமனுதபுரம் மாவட்டம்)

21—5—57 அன்று

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து
எஸ். முத்து, சோணையா
பொன்ராம்

★

பூசாரிப்பட்டி:

(ஏற்காடு தொகுதி)

கே. வி. கே. சாமி திடலில்

(வண்டிபேட்டை மைதானத்தில்)

தி. மு. கழகத் துவக்க விழா

19—5—57 இரவு 8 மணிக்கு

தலைவர்: பி. ஆர். நல்லதம்பி

பேசுபவர்:

மு. கருணநிதி
இரா. சகநாதன்
டி. ஆர். கோவிந்தன்

★

கபிலர்மலை:

(சேலம் மாவட்டம்)

திரு. வி. க. திடல்

20—5—57 அன்று

தி. மு. கழகத் துவக்க விழா

தலைவர்: கு. பழனியப்பன்

பேசுபவர்:

க. அன்பழகன்
சி. வே. வேலப்பன்
வி. ஏ. இராமநாதன்
வணங்காமுடி

★

சிதம்பரம்:

வீரபத்திரசாமி கோயில் தெரு

20—5—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: செ. இராமசாமி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
தில்லை-வில்லாளன்
இரா. சக்கரவர்த்தி
இரத்தின-பாலகுருசாமி
பொன்-சொக்கலிங்கம்

பாராட்டு கூட்டம்

19—5—57 காலை 10 மணிக்கு மதுரை-சிங்காரபுரம் சத்தியவாணி முத்து அம்மையார் படிப்பகத்தின் சார்பில், தோழியர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ. அவர்களைப் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் தோழர் இ. சோணைமுத்து தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. நன்றியுரையாற்றுவார்.

திருமணம்

20—5—57 காலை 8 மணியளவில், தஞ்சை-முத்துபேட்டையில் தோழர் இராமசெயம் தோழியர் செயலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் அறிவுடை நம்பி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

20—5—57 மாலை 6 மணிக்கு, சென்னை-மின்ட்சுப்பராயலுநாயுடு தெரு, எண் 22 இளங்கோ படிப்பகத்தில், தோழர் என். கோபால் தலைமையில் ‘அறிவும்-ஆற்றலும்’ என்ற பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

18—5—57 மாலை 7 மணிக்கு, சென்னை-சூளை, சௌந்திரபாண்டியனுர் படிப்பக மனையில், தோழர் தென்னன் தலைமையில் ‘ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

20—5—57 இரவு 7 மணிக்கு, சேலம்-அம்மாப்பேட்டை, 23வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் கோ. ஆ. பழனிசாமி இல்லத்தில், தோழர் எம். ஏ. பொன்னி அவர்கள் தலைமையில் ‘தற்கால அரசியல்’ எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை முன்னணிக் கழகம்

19—5—57 மாலை 5-30 மணிக்கு, திருவல்லிக்கேணி, 9, சுப்பராய செட்டித் தெருவில், திரு. சி. தங்கவேலு தலைமையில், திரு. ச. இரா. சங்கரலிங்கம் அவர்கள் ‘மொழிப்பற்று’ என்னும் பொருள் பற்றி பேசுவார்.

வேலூர்-வேலப்பாடி

தோழன் நூல் நிலைய ஆண்டுவிழா

19—5—57-ல் மேற்படி நூல் நிலையம் 6-வது ஆண்டு விழா, வேலப்பாடி-மாடுவிடும் திடலில், தோழர் எம். பி. சாரதி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் எஸ். எம். அண்ணுமலை, எம்.எல்.ஏ. டி. வி. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மயிலை - சவுந்திர பாண்டியனுர் படிப்பக உறுப்பினர்கட்கு:

20—5—57 இரவு 9 மணிக்கு, மேற்படி படிப்பகத்தின் பொது உறுப்பினர் கூட்டம் படிப்பகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சென்னை-சூளை கே. வி. கே. சாமி நினைவு படிப்பக செயற்குழு உறுப்பினர்கட்கு:

19—5—57 காலை 8 மணிக்கு, மேற்படி படிப்பக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம், சூளை - கலியாண மேஸ்திரி தோட்டம், எண். 149 இல்லத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.